Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**M.C.1/2024**

**2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 07 ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் ம.சா. 2 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம.சா. | - | 2 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | மங்கையகரசி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | தேவராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை அண்ணாநகர் | வயது | - | 52/2025 |
| சாதி | - | | | | |

**07-07-2025**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

நான் குடியிருக்கும் வீட்டில் கதவு எண் என்ன என்றால் 9/1054 ஆகும். எதிர்மனுதாரர் எங்கு குடியிருக்கிறார் , கதவு எண் என்ன என்றால் சிறுகுன்றாவில் குடியிருக்கிறார், கதவு எண் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரார் வீட்டு கதவு எண் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை, எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் தெரியும். நான் சத்தியபிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் சத்தியபிராமாணத்தில் உள்ள விசயங்களை வழக்கறிஞரிடம் சொல்லி அதை அவர் தயார் செய்து நான் படித்து பார்த்து அதற்கு பின்பு தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மனுதாராரர் ஆகிய எனது மகள் என்ன படித்துள்ளார் என்றால் B.Com. முடித்து M.Com. படித்து கொண்டிருக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள விசயங்கள் எனது மகள் ம.சா. 1 க்கும் தெரியும் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்வதற்கு முன்பு எனது மகள் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். நான் இந்த மனுவில் 2-வது சாட்சி என்றால் சரிதான் , எனது சத்தியபிரமான வாக்குமூலத்தில் 1-வது சாட்சி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சத்தியபிரமான வாக்குமூலத்தில் 3-வது பக்கத்தில் 9-வது பாராவில் எதிர் மனுதாரர் என்னை சட்டப்படி காப்பாற்ற கடமை பட்டவர் என்று உள்ளது என்றால் சரிதான். சட்டப்படி எதிர் மனுதாரர் அவரது மனைவி மக்களை காப்பாற்ற கடமைப்பட்டவர் மாமியாரை காப்பாற்ற எந்த கடமையும் இல்லை என்றால் சரிதான். சத்தியபிரமான வாக்குமூலம் 4-வது பக்கத்தில் எனக்கு உணவு உடை மருத்துவ செலவிற்கு ரூபாய் 6000 ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் உள்ளது என்றால் சரிதான். சட்டப்படி எதிர் மனுதாரர் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைபட்டவர் என்றால் சரிதான். எனது சத்தியபிரமான வாக்குமூலத்தில் நான் எனக்கு எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்சம் கோரி இருப்பது தவறு என்பதால் எனது சாட்சியம் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கில் சில ஆவணங்களை பார்வையிட வேண்டியிருப்பதாக குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டிக்கொண்டதின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.